# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளி லிருந்து


நீங்கள் பாருங்கள், ஒருவருக்காக
நீங்கள் ஜெபிக்கப் போகும்போது, அங்கு
ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது.
நண்பர்களே, நாம்
ஜெபிப்பதில்லை;
அங்குதான் நாம்
தோல்வியடைகிறோம்.
ஜெபம்
மிக முக்கியத்துவம்
வாய்ந்ததாகும்.
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
செய்தி: இயேசு யார்?,
64-0620 B, பத்தி
எண் 100



...இரவு நேரங்களில் நான் அதிகமாகத் தூங்குவதில்லை. எப்போதும் ஜெபத்தில் இருக்கிறேன். இரவு நேரம், எல்லாப் பிசாசுகளின் வல்லமையும் காலை வரும்போது முடிந்து விடுகிறது. அவைகள் உலாவி வராத நேரத்தில், அது தான் பரிசுத்த ஆவி அசைவாடி என்னுடன் பேசுகிற நேரமாக இருக்கிறது.

நீங்கள் ஜெபிக்க விரும்பினால் அதிகாலையில் ஜெபிக்கச் செல்லுங்கள்; அதிகாலையில் எழுந்திருங்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: தேவதூதனும் கட்டளையும், 50-0821, பத்தி எண் E-17



ஜெபம் காரியங்களை
மாற்றுகிறது
என்று நான்
விசுவாசிக்
கிறேன்.
ஜெபத்தினால்
மரணம் பின்னுக்குத்
தள்ளப்பட்டு, ஜீவன்
அதனிடத்தைப்
பெற்றுக்கொள்வதை
நான் பார்த்திருக்
கிறேன்.

சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

செய்தி: பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை
ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம், 57-0610, பத்தி எண் E-4



...அவருக்கு முன்பாகச் சென்று அமைதியாயிருங்கள். துணி துவைப்பது அதைத் தடை செய்ய அனுமதியாதீர்கள். எந்த ஒரு வேலையும் அதை தடை செய்யாதிருப்பதாக. எதுவும் அதைத் தடை செய்ய அனுமதியாதீர்கள். நீ என்ன செய்கிறாய் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ள இடங்கொடுக்காதீர்கள். அவருக்கு முன்பாக செல்லுங்கள். எங்காவது காடுகளுக்குச் செல்லுங்கள். சாலையின் பக்கவாட்டிற்குச் செல்லுங்கள். இரகசிய அறைக்குச் செல்லுங்கள். கதவை மூடுங்கள். குழந்தைகள் பள்ளிக்கூடத்தை சென்றடையும்போது. அங்கே கீழே உங்கள் முழங்கால்களை முடக்குவீர்களாக.

*சகோ.வில்லியம்*
*பிரன்ஹாம்*

**செய்தி:** அவருடைய
சத்தத்திற்கு செவி
கொடுங்கள்,
58-1005 M,
பத்தி எண் E-45


தாவீது சொன்னான்: ‘ஆனால், என் இருதயத்தில் அக்கிரமம் இருக்குமானால், தேவன் என் ஜெபத்தைக் கேட்க மாட்டார்’ என்று. அக்கிரமம் என்றால் என்ன? நீ செய்யக் கூடாத ஒன்றை, அது தவறு என்று அறிந்தும் செய்வது; அப்படியிருந்தும் மனந்திரும்பாமல் இருப்பது.
செய்தி: இதோ, சாலமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார், 62-0721, பத்தி எண் E-86
சகோ.வில்லியம் பிரன்ஹாம்


ஒருவருக்கொருவர் ஒருபோதும்
தீமையானவைகளைப் பேசாதீர்கள்.
ஒருவர் ஒரு தவறு செய்வாரானால்,
அவருக்காக உடனடியாக ஜெபியுங்கள்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி: அடையாளம், 63-0901 M, பத்தி எண் 243



இயேசு ஒருபோதும் அவருடைய ஜனங்களிடத்தில், ஒரு ஜெபத்தைச் சொல்லுங்கள் என்று கூறவில்லை; ‘ஜெபம் பண்ணுங்கள்’ என்றே கூறினார்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: பெர்கமு சபையின் காலம், 60-1207, பத்தி எண் 264


ஒரு பரிசுத்தவானை அவனுடைய
ஜெபத்திலிருந்து உன்னால் மறைக்க முடியாது.
மனிதன் எப்போதும் பெற்றிருந்ததிலேயே
வல்லமையான ஆயுதம் அதுதான்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி: தேவன் தம்முடைய வார்த்தையில், 57-0323, பத்தி எண் E-8


ஒரு மனிதன் தனக்கு
ஒரு மனைவியைத்
தெரிந்து கொள்வதற்கு முன்பு,
அவன் அதிகமாய் சிந்திக்கவும்,
ஜெபிக்கவும்
வேண்டும்.
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
செய்தி: ஒரு
மணவாட்டியைத்
தெரிந்து கொள்ளுதல்,
65-0429 E,
பத்தி எண் 47



ஒரு ஊழியக்காரர், ஜெபிப்பதற்கு முன்பாக, பிரசங்கம் பண்ணுவதற்கு முன்பாக, எப்போதும், எவ்வாறு தன்னைத் தானே பிரித்துக்கொள்ள வேண்டும். எதைச் செய்வதற்கு முன்பாகவும், அந்த அமைதி யான இடத்தில், அவர் தேவனோடு தனித்திருக்க வேண்டும். தேவனோடு தன்னை ஒளித்துக்கொள்ள வேண்டும்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: மறைக்கப்பட்ட ஒரு ஜீவியம், 55-1006 A, பத்தி எண் E-29


சகோ.வில்லியம் பிரன்ஹாம்
ஜெபமானது ஒரு
விசுவாசிக்கு
அதைத்தான் செய்கிறது.
அதுதான் நீ, உலகத்தை
உன்னை விட்டு
அகற்றிப்போடுகிறது...
செய்தி: மோசேயைக்
குறித்த போதனை,
56-0513,
பத்தி எண் 197

...இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பாக, ஜெபிப்பதை ஒரு பழக்கமாகக் கொள்ள எப்போதும் நாம் முயற்சிக்கிறோம். நான் முதலாவது மனம் மாற்றம் அடைந்த அந்த நாட்களிலிருந்து, அதை நான் ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளேன். காலையில் எழுந்திருப்பேன். அது மிகவும் இருளாகவும், நடப்பதற்கு பனி மிகுந்ததாகவும் இருக்கும்;

சகோ.வில்லியம்
பிரன்ஹாம்



செய்தி:
வெளிப்படுத்தின
விசேஷம்
4-ம் அதிகாரம் #2,
61-0101, பத்தி
எண் 12


ஜெபத்தைப் போல,
ஒரு
அணுகுண்டிற்கோ
அல்லது ஒரு
ஹைட்ரஜன்
குண்டிற்கோ
வல்லமை கிடையாது.
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
செய்தி:
எதிர்பார்ப்பு,
61-0207,
பத்தி எண் E-9


நீங்கள்
இரகசியமாக
ஜெபிக்கிறீர்களா?
அந்த இடத்திலேயே
தரித்திருங்கள்.
உங்களுடைய
அறைகளுக்குச்
செல்லுங்கள்.
எங்காவது ஒளிந்து
கொள்ளுங்கள்,
கீழே முழங்கால்
படியிடுங்கள்,
தேவனுக்கு
முன்பாகக்
காத்திருங்கள்.
அங்கேயே
காத்திருங்கள்.
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
செய்தி:
இயேசுவின் பட்சம்
சேர்ந்திருத்தல்,
63-1226, பத்தி
எண் 110


நாம் ஜெபிக்கத்
தொடங்கின
நேரத்திலிருந்து,
ஜெபத்திற்குப் பதில்
கிடைக்கும் வரைக்கும்,
நம்முடைய ஆத்துமாவில்
பொறுமையைப்
பெற்றுக்கொள்ளக்
கற்றுக்கொள்ள
வேண்டும்; ஏனென்றால்
பொறுமையின்
மூலமாகவே நாம்
ஜீவனைச்
சுதந்தரிக்கிறோம்.
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
செய்தி: சபைக்கால
புத்தகம்,
பிலதெல்பியா
சபைக்காலம்


…நாம் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும். அவை எல்லாவற்றிற்கும் மேலாக, உன்னுடைய ஜீவியத்தை நோக்கிப்பார். தேவனுடைய பரிசுத்தத்திற்கு உன்னுடைய ஜீவியம் ஒத்துப் போகவில்லை என்றால், திரும்பிச் சென்று மறுபடியும் ஜெபிக்கத் தொடங்கு.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி:
இராப்போஜனம்,
63-0707 E, பத்தி
எண் E-1

சில நேரங்களில் நாம் பிறருக்காக ஜெபிக்கும்போது, உங்களுக்குத் தெரியுமா? நாம் தான் அநேக நேரங்களில் உதவிகளைப் பெறுகிறோம். நீங்கள் பிறருக்காக ஜெபிக்கும் போது.

சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

செய்தி: ஏன்?,
61-0125,
பத்தி எண் E-8




நான் உண்மையிலேயே அதிகாலையில் எழுந்து, காரியங்கள் என்னைக் கலக்குவதற்கு முன்னர், நான் ஜெபத்திற்குச் சென்று பகல் எல்லாம் ஜெபித்துக் கொண்டிருப்பேன்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி: மூன்றாவது முத்திரை, 63-0320, பத்தி எண் 231-4 {18}

# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து